# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
# DEVAKOTTAI

**CC.No.141/2024**

Deposition of witness for Prosecution அ.சா.1

| | | |
|---|---|---|
| பெயர் | : | மெய்யப்ப வேளார் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | ராமு வேளார் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 02.07.2026

எதிரி ஆஜர்.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது வீரையில் வசித்து வருகிறேன். கடந்த 2024 ம் வருடம் 22 ம் தேதி திங்கட்கிழமை வீரை ஐய்யனார் கோவிலுக்கு பூசை வைத்துவிட்டு கதவை பூட்டிவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். 23 ம் தேதி செவ்வாய்க்கிழமை பூசை வைப்பதற்காக காலை 7.00 மணிக்கு போய் பார்த்தபோது கதவு உடைக்கப்பட்டிருந்தது. முன்னால் உள்ள இரும்பு கேட்டும் உடைக்கப்பட்டிருந்தது. இரும்பு உண்டியல் உடைக்கப்பட்டிருந்த உடன் ஊராட்சி மன்ற தலைவர் மகேஷ்வரனுக்கு போன் செய்து ஊர்க்காரர்கள் வந்து பார்த்து காவலர்களும் வந்து பார்த்ததார்கள். பக்கத்து வீட்டு செல்வி என்பவரின் வீடும் உடைக்கப்பட்டிருந்தது.

கிராமத்தார்களுடன் வந்து புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். (**மேற்படி புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நான் முதல் விசாரணையில் சொன்னதைதான் போலீசார் விசாரணையிலும் சொன்னேனா என்றால் ஆமாம். கோவில் உண்டியலை யார் உடைத்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கோவில் உண்டியலை எத்தனை மணிக்கு என்ன தேதியில் உடைத்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ஆமாம்.

**<u>மறு விசாரணை:இல்லை</u>**

S/d.Meiyappa velar

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI
CC.No.141/2024

Deposition of witness for Prosecution அ.சா.2

| | | |
|---|---|---|
| பெயர் | : | தேவி |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | சோமசுந்தரம் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 02.07.2026

எதிரி ஆஜர்

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது நடுவீரையில் வசித்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். கடந்த 23.04.2024 ம் தேதி காலையில் 9.00 மணிக்கு நான் வீரையில் உள்ள என் வீட்டை போய் பார்த்தபோது கிரில் கதவும் மரக்கதவும் உடைக்கப்பட்டிருந்தது. பீரோவும் உடைக்கப்பட்டிருந்தது. பொருள் எதுவும் காணாமல் போகவில்லை. அதன்பிறகு போலீசுக்கு தகவல் சொன்னோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

என் வீட்டை யார் உடைத்தார்கள் என்ற விபரம் தெரியாது என்றால் சரிதான். என்ன தேதியில் உடைத்தார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் 23.04.2024 ம் தேதி.

போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை:இல்லை</u>**

**S/d.Devi**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.